## 10 ஆண்டுகளுக்குப் பிறகு

# அண்ணாசாலை இருவழிப் பாதையானது

■ சென்னை

மெட்ரோ ரயில் பணிக்காக ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்ட சென்னை அண்ணா சாலை 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இரு வழிப் பாதையானது. முதல் கட்டமாக இன்றும் நாளையும் 2 நாள் சோதனை ஓட்டம் நடைபெறுகிறது.

இதுகுறித்து சென்னை போக்குவரத்து போலீஸார் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

தற்போது அண்ணா சாலையில் மெட்ரோ ரயில் பணிகள் முடிவடைந்த நிலையில் அண்ணா சாலை ஜி.பி.ரோடு முதல் ஒயிட்ஸ் ரோடு வரை மீண்டும் இருவழிப்பாதையாக மாற்றப்பட உள்ளது. அதனை நடைமுறைப்படுத்த சோதனை ஓட்டம் இன்றும் (11-ம் தேதி) நாளையும் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, அண்ணாசாலையில் ஒயிட்ஸ் ரோடு சந்திப்பில் இருந்து வெல்லிங்டன் சந்திப்பு வரை இரு வழிப்பாதையாக மாற்றப்படுகிறது.

தற்போது ஜி.பி.ரோட்டில் நடைமுறையில் உள்ள ஒருவழிப் பாதை மாற்றியமைக்கப்பட்டு ராயப்பேட்டை மணிக்கூண்டில் இருந்து வாகனங்கள் வெல்லிங்டன் சந்திப்பு நோக்கி அனுமதிக்கப்படுகின்றன. மாறாக வெல்லிங்டன் சந்திப்பில் இருந்து ராயப்பேட்டை மணிகூண்டு வரை வாகனங்கள் செல்ல தடை செய்யப்படுகிறது.

> ▼ **சோதனை ஓட்டம் இன்றும் (11-ம் தேதி) நாளையும் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையினரால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.**

ஒயிட்ஸ் ரோடு இருவழிப் பாதையாக மாற்றப்படுகிறது.

ராயப்பேட்டை மணிகூண்டில் இருந்து வரும் வாகனங்கள் அண்ணாசாலை நோக்கியும், அண்ணாசாலையில் இருந்து வரும் வாகனங்கள் ராயப்பேட்டை மணிக்கூண்டை நோக்கியும் ஒயிட்ஸ் ரோட்டில் அனுமதிக்கப்படுகிறது.

ஸ்மித் ரோடு ஒரு வழிப்பாதையாகவே முன்பு இருந்தது போன்றே ஒயிட்ஸ் ரோடு சந்திப்பில் இருந்து அண்ணாசாலை செல்ல அனுமதிப்பப்படுகிறது.

அண்ணா மேம்பாலத்தில் இருந்து அண்ணா சிலை நோக்கி வரும் வாகன போக்குவரத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

அண்ணா சிலையில் இருந்து ஜெமினி அல்லது தேனாம்பேட்டை நோக்கி செல்லும் வாகனங்கள் எல்.ஜி.சி. மற்றும் டி.வி.எஸ். வழியாக அண்ணா மேம்பாலம் நோக்கிச் செல்லலாம்.

அண்ணா சிலையில் இருந்து பின்னி சாலை நோக்கிச் செல்லும் வாகனங்கள் ஸ்பென்சர் சந்திப்பில் வலது புறம் செல்லலாம்.

பாரதி சாலையில் இருந்து வரும் வாகனங்கள் ஜி.பி.ரோடு மற்றும் ஒயிட்ஸ் ரோடு வழியாக அண்ணாசாலை சென்றடையலாம்.

ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்து (வெஸ்ட் காட் ரோடு) அண்ணாசாலை நோக்கிச் செல்லும் வாகனங்கள் ராயப்பேட்டை மணிக்கூண்டு அடைந்து ஒயிட்ஸ் ரோடு மற்றும் ஜி.பி.ரோடு வழியாக செல்லலாம்.

பின்னி சாலையில் இருந்து வரும் வாகனங்கள் ஸ்பென்சர் சந்திப்பில் வலதுபுறம் திரும்பி அண்ணாசாலை மற்றம் அண்ணா மேம்பாலம் செல்லலாம்.

பின்னி சாலையில் இருந்து பாரதி சாலை செல்ல அண்ணா சாலை பட்டுல்லாஸ் சாலை வழியாகச் சென்று இடதுபுறம் திரும்பி ஒயிட்ஸ் ரோடு மற்றும் ராயப்பேட்டை மணிகூண்டு வழியாகச் செல்லலாம்.

பின்னி சாலையில் இருந்து ஒயிட்ஸ் ரோடு செல்லும் வாகனங்கள் ஸ்பென்சர் சந்திப்பில் வலதுபுறம் திரும்பி அண்ணா சாலை பட்டுல்லாஸ் சாலை வழியாகச் சென்று ஒயிட்ஸ் ரோட்டுக்குச் செல்லலாம்.

கிரீம்ஸ் சாலையில் இருந்து அண்ணா மேம்பாலம் நோக்கிச் செல்ல வேண்டிய வாகனங்கள் அண்ணா சாலை மற்றும் ஒயிட்ஸ் சாலை சந்திப்பில் 'யு டர்ன்' மற்றும் 'ரைட் டர்ன்' எடுத்து அண்ணா மேம்பாலம் மற்றும் ஒயிட்ஸ் சாலைக்குச் செல்லலாம்.

அண்ணாசாலையில் இருந்து ஸ்மித் ரோடு வழியாக ஒயிட்ஸ் ரோடு செல்ல தடை செய்யப்பட்டுள்ளது.

ஒயிட்ஸ் சாலையில் இருந்து அண்ணாசாலை செல்லும் வாகனங்கள் திரு.வி.க சாலையில் இடதுபுறம் திரும்பி பின்னர் சத்யம் தியேட்டர், பீட்டர்ஸ் சாலை வழியாக அண்ணா சாலையை அடையலாம்.